# III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.2/2012

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Thiru.P.Kothandaraman, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 26-04-2024

| | | | |
|---|---|---|---|
| Name | : ஆ. மனோவா | Village | : |
| Father's Name | : ஆதிமூலம் | Calling | : |
| Age | : | Taluk | : |

<u>முதலாவது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

வா.த,சா.9 ல் இரண்டாம் பிரதிவாதி நான்காம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திய அனைத்து கிரைய ஆவணங்களின் குறிப்புகள் உள்ளதா என்றால் ஆம். இந்த கிரைய ஆவணங்கள் என்னையும் கட்டுப்படுத்தும் என்றால் கட்டுப்படுத்தாது. பிரதிவாதிகள் 1 முதல் 4 வரையிலானோர் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர் வழக்குரையில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 2வது பிரதிவாதி தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர் வழக்குரையில், நான் சொல்லியது போல் அவர் ஆந்திராவிற்கு கடத்தப்பட்டது குறித்தான, விவரம் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். 2ஆம் பிரதிவாதி அசல் வழக்கு எண்.29/2013 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளது பற்றிய விவரம் எனக்கு தெரியும். அந்த வழக்கில் என்ன பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. அதில் 2ஆம் பிரதிவாதி 4ஆம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தை ரத்து செய்ய சொல்லி கேட்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கில் பிலாலை வைத்து நான் ஏமாற்றி ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டேன் என்ற விவரத்தை, 2ஆம் பிரதிவாதி சொல்லியுள்ளார் என்றால் எ னக்கு அது பற்றி தெரியாது. 2ஆம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் என்க்கு முன்னதாகவே 4ஆம் பிரதிவாதியுடன் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டுள்ளதாக சொல்லியுள்ள விவரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 2ஆம் பிரதிவாதி, மேலும் பிலாலுடன் சேர்ந்து நான் மோசடியாக ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டது குறித்து காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளதாக கூறியுள்ளது பற்றி எனக்கு தெரியாது. அந்த புகாரின் பேரில் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் உத்தரவு

பிறப்பிக்கப்பட்டு அதன் பேரில் காவல் துறையினர் என்னை விசாரித்தனர் என்றால் விசாரிக்கவில்லை. தற்போது சாட்சி ஞாபகமில்லை என்று கூறுகிறார். 2011 ஜுன் மாதம் காவல் துறையினரின் விசாரணையில் நான் எனது பெயரில் ஏற்படுத்திக்கொண்ட கிரைய ஒப்பந்தத்தை செயல்முறைப்படுத்தமாட்டேன் என உறுதி மொழி அளித்தேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில், 3600 சதுரடி சொத்தை அரசாங்கம் ஆர்ஜீதம் செய்வது சம்மந்தமான அனுப்பிய அறிவிப்பின் நகலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. செய்தித்தாளில் அது சம்மந்தமான பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1வது மற்றும் 2வது பிரதிவாதிகள் உடனான எனது உறவு சுமுகமாக உள்ளதா என்றால் உள்ளது. சிறு வயதிலிருந்தே எனக்கு அவரை தெரியும். 1 மற்றும் 2 பிரதிவாதிகள் எனக்கு நேரடியாக தெரியும் நிலையில் 3 ஆம் பிரதிவாதியுடன் நான் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் என்ன என்றால் 1வது மற்றும் 2வது பிரதிவாதிகள் தாங்கள் கடன் வாங்கி வைத்திருந்ததை மறைத்துவிட்டதால் அவர்களை நான் அணுகவில்லை. வா.த.சா.2 கிரைய ஒப்பந்தம் எந்தவிதமான வில்லங்கமும் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சொத்து சம்மந்தமாக எந்தவித அடமானமும் இல்லை, ஆர்ஜீதமும் இல்லை, குத்தகையும் இல்லை என்பது தான் அதன் பொருள்.

(கற்றறிந்த முதலாம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).